**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**
**2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**<u>இ.ம.எண்.1/2025 மற்றும் 2/2025 ன் அசல் வழக்கு எண்.20/2019</u>**

1. திருமதி. வசந்தா,

2. மோகனசுந்தரம்,

3. திருமதி. N. ரேவதி,

4. திருமதி. K.S. நிவேதினி,

5. திருமதி. G. பிரியா

1 முதல் 5 மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள்

..எதிர்..

திருமதி. நாகம்மாள்

தனது பொது அதிகார முகவர் P. சிவபிரகாசம் மூலமாக

பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்.

(Rep. by her Power of Attorney Agent P. Sivaprakasam)

... எதிர்மனுதாரர்/வாதி

இந்த இரு மனுக்களானது 04.11.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது 1 முதல் 5 மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. நிசார் அகமது

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.11.12 19:23:10 +0530

மற்றும் D. சரவணன் அகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் M.K. முரளி அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இந்த மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>பொதுவான உத்தரவு</u>**

இம்மனுக்கள் 1 முதல் 5 மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் வா.சா.1ன் சாட்சியத்தை மீண்டும் திறக்கவும் மற்றும் வா.சா.1ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணையை தொடரவும் அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>இரு மனுக்களிலும் 1 முதல் 5 மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:-</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் ஆவர். மனுதாரர்/வாதி விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு வாதுரைக்காக நிலுவையில் உள்ளது.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.11.12 19:23:14 +0530

1 மற்றும் 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு பதிலாக, 2 வது பிரதிவாதியே வழக்கை கவனித்து வருகிறார். ஜூன் 2024 மாதத்தில், 2 வது பிரதிவாதி மூளை வலிப்பால் (பிரெய்ன் ஸ்ட்ரோக்) கடுமையாக பாதிக்கப்பட்டார், மேலும் அந்த வலிப்பு காரணமாக பேசுவதற்கோ, நடப்பதற்கோ அல்லது பிற அன்றாட செயல்பாடுகளை செய்வதற்கோ இயலாமை ஏற்பட்டது. இதன் காரணமாக, அவரால் தனது வழக்கறிஞருடன் வழக்கை பின்தொடர முடியவில்லை. கடந்த ஒரு வாரமாக இப்போது அவரது நிலை மேம்பட்டுள்ளது, மேலும் வழக்கு குறித்து தனது வழக்கறிஞரை தொடர்பு கொண்டார். அப்போதுதான், அவரது சாட்சியங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, வழக்கு வாதுரைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொண்டார். அவரது சார்பாக, அவரது வழக்கறிஞர் ஏற்கனவே வாதி தரப்பு சாட்சியை (PW–1) குறுக்கு விசாரணை செய்துள்ளார். எனினும், வழக்கு சொத்து தொடர்பான சில முக்கியமான உண்மைகள் முன்னர் அவரது வழக்கறிஞருக்கு விளக்கப்படவில்லை. ஆகையால், வா.சா.1 ன் சாட்சியை மேலதிக குறுக்கு விசாரணைக்காக மீண்டும் அழைப்பது நியாயமானதும், அவசியமானதும் ஆகும். மேலும், சரியான தீர்ப்புக்காக, 2 வது பிரதிவாதியின் சாட்சியங்களை எடுப்பதற்காக மேற்கண்ட வழக்கை மீண்டும் திறக்க வேண்டியதும்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.11.12 19:23:19 +0530

அவசியமானது ஆகும். 2 வது பிரதிவாதி இதன் மூலம், நடவடிக்கைகளில் எந்த தாமதமும் ஏற்படுத்த மாட்டார் எனவும், வழக்கின் விரைவான தீர்வுக்கு முழுமையாக ஒத்துழைப்பார் எனவும் உறுதியளித்துள்ளார். எனவே அசல் வழக்கில் வா.சா.1 ன் சாட்சியத்தை மீண்டும் திறக்கவும் மற்றும் வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணையை தொடரவும் அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

3. <u>இரு மனுக்களிலும் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:–

எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவர். 1 முதல் 5 மனுதாரர்கள்/ 1 முதல் 5 பிரதிவாதிகள் வரை தாக்கல் செய்துள்ள, வா.சா–1 சாட்சியை மீண்டும் விசாரணைக்கு அழைக்கக் கோரும் மனுக்கள், சட்டப்பூர்வமாகவோ அல்லது உண்மை நிலவரங்களின் அடிப்படையிலோ ஏற்கத்தக்கதல்ல. மேற்குறிப்பிட்ட மனுவை கூறப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றையும் இந்த எதிர்மனுதாரர்/வாதி வன்மையாக மறுக்கிறார். மனுதாரர்கள் இந்த வழக்கை நடத்துவதில் முற்றிலும் கவனக்குறைவாகவே உள்ளனர். வா.சா–1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்கு இந்த நீதிமன்றம் மனுதாரர்களுக்கு போதுமான நேரம் வழங்கியது, அதன் பின்னரே சாட்சியங்கள் முடிவுக்கு

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.11.12 19:23:23 +0530

கொண்டுவரப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் கூறும் காரணங்கள் அனைத்தும் உண்மையற்றவை மற்றும் தவறானவை. எனவே, இரு மனுக்களையும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–

இம்மனுக்களில் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

5. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும் முன்னிடப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>பிரச்சனை:–</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் அசல் வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் ஆவர். எதிர்மனுதாரர்/வாதி, விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது வாதுரைக்காக நிலுவையில் உள்ள நிலையில் 1 முதல் 5 மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகள் இம்மனுக்களை தாக்கல் செய்து 1 மற்றும் 3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு பதிலாக, 2வது பிரதிவாதியே வழக்கை கவனித்து வந்ததாகவும் ஜூன் 2024 மாதத்தில், 2வது பிரதிவாதி மூளை வலிப்பால் (பிரெய்ன் ஸ்ட்ரோக்) கடுமையாக பாதிக்கப்பட்டு, பேசுவதற்கோ, நடப்பதற்கோ அல்லது பிற அன்றாட

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.11.12 19:23:27 +0530

செயல்பாடுகளை செய்வதற்கோ இயலாமல் இருந்ததாகவும் இதன் காரணமாக, அவரால் தனது வழக்கறிஞருடன் வழக்கை பின்தொடர முடியவில்லை என்றும் கடந்த ஒரு வாரமாக இப்போது அவரது நிலை மேம்பட்டுள்ளதால் வழக்கு குறித்து தனது வழக்கறிஞரை தொடர்பு கொண்ட போது தான் அவரது சாட்சியங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, வழக்கு வாதுரைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொண்டதாகவும், ஆகையால், வா.சா.1ன் சாட்சியத்தின் மேலதிக குறுக்கு விசாரணைக்காக மீண்டும் அழைக்க வேண்டுமென்றும் 2வது பிரதிவாதியின் சாட்சியங்களை எடுப்பதற்காக அசல் வழக்கை மீண்டும் திறக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மறுத்துரைக்கப்பட்டு வா.சா–1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்கு இந்த நீதிமன்றம் மனுதாரர்களுக்கு போதுமான நேரம் வழங்கியுள்ளதாகவும், அதன் பின்னரே சாட்சியங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன என்றும் மனுதாரர்கள் தரப்பில் கூறும் காரணங்கள் அனைத்தும் உண்மையற்றவை என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ள போதிலும் அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் அசல் வழக்கில் முழுமையான தீர்வு காணும் வகையிலும்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.11.12 19:23:32 +0530

பல்வகை நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் இம்மனுக்களை நிபந்தனையுடன் அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.1,000/– செலவுத் தொகையாக 18.11.2025 ற்குள் நேரில் செலுத்தும் பட்சத்தில் இம்மனுக்கள் அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படும் என்றும் நிபந்தனையுடன் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 19.11.2025.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI Digitally signed by G BHUVANESWARI Date: 2025.11.12 19:23:38 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI Digitally signed by G BHUVANESWARI Date: 2025.11.12 19:23:42 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**வரைவு/தெளிவு**

**பொதுவான உத்தரவு**

**இ.ம.எண்.1/2025 மற்றும்**
**2/2025 ன்**
**அசல் வழக்கு எண்.20/2019**
**நாள் 11.11.2025**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**